# பட்டமேல் விசேட தேவைகள்சார் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்
# 2019/2020

## மாணவர் கைந்நூல்


விசேட தேவைகள்சார் கல்வித் துறை
கல்விப்பீடம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
நாவல, நுகேகொட.

தொலைபேசி இல: 0112881015, 011288149

தொலைநகல்: 0112768055

மின்னஞ்சல்: postmast@ou.ac.lk

இணையத்தளம்: www.ou.ac.lk

**மாணவர்களுக்கு சில வார்த்தை……**

பட்டமேல் விசேட தேவைகள்சார் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்தினைத் தொடரவிருக்கும் உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தைத் தொலைக்கல்வி முறையில் பயில்வதற்காக நீங்கள் பதிவு செய்யப்படவுள்ளீர்கள் அல்லது செய்யப்பட்டுள்ளீர்கள். இம் முறையில் விரிவுரையாளர்களை அல்லது போதனா ஆசிரியர்களை நேரில் சந்திக்கும் சந்தர்ப்பங்கள் மிகக்குறைவாகும். எனவே, உங்கள் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான சகல விடயங்களையும் **இக்கைநூலை நன்றாக வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும்** என்று எதிர்பார்க்கப்படுகிறீர்கள்.

இப் பிரசுரத்தில் செம்மையான தகவலை அளிப்பதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. எனினும் திறந்த பல்கலைக்கழக ஒழுங்கு விதிகளில் மேற்கொள்கின்ற மாற்றங்கள், கௌ்கை மாற்றங்கள், நிதி அல்லது வேறு இடர்பாடுகள் காரணமாக ஏற்படும் மாற்றங்கள் என்பவற்றிற்கிணங்க இக்கைந்நூலில் உள்ளடங்கியுள்ள விடயங்களில் மாற்றங்களுக்கும் திருத்தங்களும் மேற்கொள்ளப்படலாம்.

இக் கைந்நூலில் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு நாட் பாடசாலைகள், போதனா வகுப்புக்கள் முதலியவற்றில் கலந்துகொள்வதும், குறிக்கப்பட்ட தினத்துக்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்ட ஒப்படைகளைச் சமர்ப்பிப்பதும் கற்பித்தல் பயிற்சியைச் செய்வதும் உங்களது பொறுப்பாகும். இக்கைந்நூலுக்குப் புறம்பாகக் கால அட்டவணைகளில் ஏற்படும் மாற்றங்கள் மட்டுமே அறியத்தரப்படும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

***இந்நிகழ்ச்சித்திட்டத்தினை (PGDSNE) வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்கு எமது வாழ்த்துக்கள்.***

கல்விப்பீடம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
நாவல
நுகேகொட.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1.0 பட்டமேல் விசேட தேவைகள்சார் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் | 05 |
| 2.0 அனுமதித் தகைமைகள் | 06 |
| 3.0 கற்கை நிகழ்ச்சித்திட்ட உள்ளடக்கம் | 07 |
| 4.0 மதிப்பீடு | 12 |
| 5.0 பட்டம் வழங்கல் | 26 |
| 6.0 கட்டணங்கள் | 27 |
| 7.0 நிகழ்ச்சித்திட்டம்: விசேட தேவைகள்சார் கல்வித்துறை | 28 |
| 8.0 நிகழ்ச்சித்திட்டத்தினைப் பிற்போடல் | 29 |
| 9.0 நிகழ்ச்சித்திட்ட ஆரம்பம் | 30 |
| 10.0 விண்ணப்பப்படிவம் | 30 |
| 11.0 My OUSL | 30 |
| 12.0 விண்ணப்பித்தலும் பதிவுசெய்தலும் | 31 |
| 13.0 முக்கிய திகதிகள் | 32 |
| 14.0 நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்பான ஆசிரியர் குழுக்கள் | 34 |
| 15.0 முகவரி மாற்றம் | 35 |
| இணைப்பு – I | 36 |

## கல்விப்பீடம்

கல்விப்பீடமானது மூன்று துறைகளைக் கொண்டது.

(i) *இடைநிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வித்துறை*

(ii) *முன்பிள்ளை மற்றும் ஆரம்பக்கல்வி கல்வித்துறை*

(iii) *விசேட தேவைகள்சார் கல்வித்துறை*

விசேட தேவைகள்சார் கல்வித் துறை தற்போது இரண்டு பிரதான நிகழ்ச்சித்திட்டங்களையும் மூன்று குறுங்கால நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்துகின்றது.

பிரதான நிகழ்ச்சித்திட்டங்கள்:

1. *விசேட தேவைகள் சார் கல்வி பட்டமேல் டிப்ளோமா நிகழ்ச்சி*
2. *விசேட தேவைகள்சார் கல்வி இளமானிப் பாடநெறி*

குறுங்கால நிகழ்ச்சித்திட்டங்கள்:

3. *கற்றல் இயலாமை உள்ள பிள்ளைகளுக்கு கற்பித்தலுக்கான குறுங்காலப் பாடநெறி*
4. *உள்ளடங்கல் கல்வியில் குறுங்காலப் பாடநெறி*
5. *விசேட தேவையுள்ள பிள்ளைகளின் பெற்றோருக்கான குறுங்காலப் பாடநெறி*

## 1.0 பட்டமேல் விசேட தேவைகள்சார் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்

### 1.1 நோக்கங்கள்

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம் விசேட தேவைகள்சார் கல்வியில் பட்டதாரி ஆசிரியர்களின் தொழில்சார் அறிவினையும் திறன்களையும் விருத்தி செய்தல்.

### 1.2. நிகழ்ச்சித்திட்டத்தின் கால எல்லை

இது பதிளைந்து (15) மாதகால நிகழ்ச்சித்திட்டமாகும்.

### 1.3 கற்பித்தல் மொழி

இந்நிகழ்ச்சித்திட்டம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடத்தப்படும்.

### 1.4 நடை பெறும் இடங்கள்

**ஆங்கில நிகழ்ச்சித் திட்டம் கொழும்பு மத்திய நிலையத்தில் மாத்திரம் நடைபெறும்**

தமிழ் மொழி மூலம் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பிராந்திய நிலையங்களிலும் ஹற்றன், அம்பாறை ஆகிய கற்கை நிலையங்களிலும் நடைபெறும். சிங்கள மொழி மூலம் கொழும்பு, கண்டி, ஆகிய நிலையங்களில் மாத்திரம் நடைபெறும்.

இருந்த போதிலும், குறித்த நிலையம் ஒன்றில் பதிவு செய்யும் மாணவர்களின் எண்ணிக்கை **பதினைந் (15) திலும்** குறைவாகக் காணப்படுமாயின்

அம்மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் அருகிலுள்ள, இந்நிகழ்ச்சித்திட்டம் இடம்பெறும் பிராந்திய நிலையத்துடன் அல்லது கற்கை நிலையத்துடன் இணைக்கப்பட்டு இடம்பெறும்.

## 2.0 அனுமதித் தகைமைகள்

**2.1 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் குறைந்தது மூன்று வருட காலத்தைக் கொண்ட இளமாணிப்பட்டம் பெற்ற பட்டதாரியாக அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அதற்குச் சமமான தகைமைகள்** உடையவராகவும்,

**2.2 அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் சேவையிலுள்ள ஆசிரியராக அல்லது அதிபராக, ஆசிரிய ஆலோசகராக அல்லது ஆசிரியர் கல்வியியலாளராக அல்லது இலங்கை கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தராக அல்லது முழுநேர விரிவுரையாளராக (பல்கலைக்கழகம், தேசிய கல்வியியற் கல்லூரி, தொழிநுட்பக்கல்லூரி, ஆசிரியர் கல்லூரி) அல்லது ஆசிரியர் மத்திய நிலைய முகாமையாளராக அல்லது செயற்றிட்ட அலுவலராக (தேசிய கல்வி நிறுவகம்)** இருப்பதுடன்,

**2.3 05. 03. 2019 அல்லது அதற்கு முன்னர்** நியமனம் பெற்றவராகவும் முதல் நியமனத்திலிருந்து தொடர்ச்சியாக சேவையில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

**விசேட குறிப்பு:**

**இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விசேட கல்வித்துறைசார் துறைகளில் பணிபுரிபவராக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையுடன், கல்வி அமைச்சு இந்நிகழ்ச்சித்திட்டத்தை (PGDSNE) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் நடாத்தப்படும் பட்டப்பின் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்திற்குச் (PGDE) சமமான வகையில் அங்கிகரித்துள்ளது.**

## 3.0 கற்கை நிகழ்ச்சித்திட்ட உள்ளடக்கம்

இந் நிகழ்ச்சித்திட்டம் **கொண்டுள்ள அனைத்துப் பாடநெறிகளும் கற்பித்தற் பயிற்சியும் கட்டாயமானவையாகும்.** பாடநெறிகளுக்குரிய மொடியூல்களை மாணவர்கள் தாம் பதிவு செய்துள்ள மத்திய/பிராந்திய கற்கை நிலையங்களில் தமது மாணவர் பதிவுப் புத்தகத்தை (Student’s Record Book) சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ள முடியும்.

## 3.1. நிகழ்ச்சித்திட்ட அமைப்பு

| பாடநெறிக் குறியீடு | **பாடநெறிகள்** |
|---|---|
| SNP8530 | விசேட தேவைகள் கல்விக்கான உளவியல் |
| SNP8531 | விசேட தேவைகள் தத்துவ அடிப்படைகள் |
| SNP8532 | விசேட தேவைக்கான கல்வி தொழினுட்பம் |
| SNP8333 | விசேட தேவைக்கான கல்வியில் அளவீடும் மதிப்பீடும் |
| SNP8334 | விசேட நிலைமைகள் மற்றும் கற்றல் தேவைக்கான அறிமுகம் |
| SNP8335 | விசேட தேவைகள் கல்வியில் சமூகமயமாக்கல் அடிப்படைகள் |
| SNP8336* | கல்வியில் அறியப்படும் செல்நெறி * |
| SNP8237 | புனர்நிர்மாணமும் சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வும் |
| SNP8338 | கல்வி வழிகாட்டலும் ஆலோசனை கூறலும் |
| **தொடருறு கல்வி** | |
| SNE8839 | கற்பித்தற் பயிற்சி<br>(10 கிழமைகள் தொடர் பயிற்சித்திட்டம்) |

*** விண்ணப்பதாரிகள்** SNP8336**ஐ வருவழி (Online) கற்கையாகவும் பதிவு செய்ய முடியும்.**

**கல்வித் தொழினுட்ப பாடநெறி** (SNP8532**)**

கற்பித்தலில் விசேட முறையாக்காக மாணவர்கள் பின்வரும் பாடங்களில் ஒரு பாடத்தை மாத்திரமே தெரிவு செய்யலாம்.

1. சமயம்(சைவநெறி/கிறிஸ்தவம்/இஸ்லாம்/பௌத்தம்)
2. மொழி (தமிழ்மொழி/சிங்களம்/ஆங்கிலம்)
3. விஞ்ஞானம்
4. கணிதம்
5. ஆரம்ப வகுப்புக்களுக்கான ஒன்றிணைந்த கற்பித்தல்.

**கற்பித்தற் பயிற்சிக்கு மேலே தெரிவு செய்த பாடத்தை/பாடங்களையே தெரிவு செய்ய வேண்டும்.** ***எவ்வாறாயினும் அனைத்து மாணவர்களும் கீழ்க்காணப்படும் விசேட கல்வித் தேவைகளுள்ள பிள்ளைகள் தொடர்பான பாடப்பரப்புக்களையும் மேலதிகமாகக் கற்றல் வேண்டும். அனைத்து மாணவர்களுக்கும் கீழ்வரும் பாடப்பரப்புக்கள் தொடர்பான குறிப்புக்கள் வழங்கப்படும்.***

- விழிப்புலக் குறைபாடுள்ள பிள்ளைகளுக்குக் கற்பித்தல்.
- செவிப்புலக் குறைபாடுள்ள பிள்ளைகளுக்குக் கற்பித்தல்.
- அறிவுசார் இயலாமையுடைய பிள்ளைகளுக்குக் கற்பித்தல்.
- கற்றல் இயலாமையுடைய பிள்ளைகளுக்குக் கற்பித்தல்.

நீங்கள் SNP8532 இறுதிப் பரீட்சையின் சில வினாக்களுக்கான விடைகளை மேலே குறிப்பிட்ட நான்கு பகுதிகளிலும் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## 3.1 கற்றல் முறைமை

பிரதான கற்பித்தல் முறை தொலைக்கல்வி முறையாகும். ஒவ்வொரு பாடநெறிக்கெனவும் வழங்கப்படும் மொடியூல்களைத்

தவிர கட்புல செவிப்புல சாதனங்களும் பயன்படுத்துவதற்கான ஒழுங்குகள் உண்டு. மொடியூல்களில் தரப்பட்டுள்ள செயற்பாடுகளைச் செய்வதும், வினாக்களுக்கு விடையளிப்பதும், பாட அலகுகளுக்கு மேலதிகமாக வாசிப்பில் ஈடுபடுவதும் மாணவர்களின் பொறுப்பாகும். இப்பாடநெறிகள் காலத்திற்கு காலம் நடைபெறும் நாட்பாடசாலைகள், போதனா வகுப்புக்கள், செயலமர்வுகள், கருத்தரங்குகள் போன்றவற்றால் மேலும் வளமூட்டப்பட்டும், மாணவரின் பிரச்சினைகள் கலந்துரையாடப்படும்.

## 3.3 நாட் பாடசாலைகள்

நாட்பாடசாலைகள் நடத்தப்படுவதன் நோக்கம் தொலைக்கல்வி முறையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அப்பாடத்திற்கான கற்றல் அமர்வுகளில் உள்ள விடயங்கள் தொடர்பாக மேலதிக அறிவைப் பெற்றுக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் அளிப்பதாகும்.

நாட்பாடசாலைகள், வார நாட்களில் அல்லது வார இறுதி நாட்களில் ஒழுங்கு செய்யப்படலாம். நாட்பாடசாலை, வார நாட்களில் நடைபெறுமாயின் அதற்கென ஆசிரியர்களும் கல்விசார் உத்தியோகத்தர்களும் கடமை லீவு பெற்றுக்கொள்ள முடியும். ஒவ்வொரு நாட்பாடசாலையிலும், ஆரம்பம் தொடக்கம் இறுதிவரை பூரணமாகக் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு மட்டுமே அந்நாட்பாடசாலைகளுக்கான வரவுச்சான்றிதழ் அளிக்கப்படும். எனவே நேர அட்டவணையின்படி, நாட்பாடசாலைகளுக்குச் சமுகமளித்தலும், நாட்பாடசாலை முடியும்வரை முழுமையாகப் பங்குபற்றலும் மாணவர் பொறுப்பாகும். நாட்பாடசாலைகளுக்கு சமுகமளிப்பதற்கு

முன்பதாக மொடியூல்களை வாசித்து முன் ஆயத்தத்துடன் வரவேண்டுமென நீங்கள் எதிர்பார்க்கப் படுகின்றீர்கள்.

சுய கற்கையின்போது, மாணவர் இடர்படக்கூடிய பகுதிகளுக்கு, நாட்பாடசாலையில் விளக்கமளிக்கப் படும். அத்துடன் பாடநெறி தொடர்பான மேலதிக தகவல்கள், பிரசுரங்கள் என்பனவும் வழங்கப்படலாம். நாட்பாடசாலைகளில் கலந்து கொள்வதன் மூலம், இக்கற்கை நெறியைப் பயிலும் ஏனைய மாணவர்களைச் சந்திப்பதற்கும், பாடநெறி தொடர்பான கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது.
எல்லா நாட்பாடசாலைகளும் செயற்பாடுகள் சார்ந்த சுவாரஸ்யமான அமர்வுகளாக ஒழுங்கமைக்கப்படும். இது மாணவர்களுக்கு குழு வேலை, முன்வைப்பு போன்ற செயற்பாடுகள் மூலமாகக் கற்றலில் ஈடுபட்டுக் கற்பதற்கு சந்தர்ப்பம் வழங்கும். ஆதலால் மாணவர்கள் இதில் உற்சாகத்துடன் பங்குபற்றி தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள அதிக சந்தர்ப்பம் கிடைக்கும்.

நாட்பாடசாலைகளுக்கான தலைப்புகளும் நேரசூசிகளும் வேறாக வழங்கப்படும்.

## 3.4 மாணவர் போதனா வகுப்புச் செயலமர்வு

நாட்பாடசாலைகளுக்கு மேலதிகமாக **போதனா வகுப்புக்கள்** (Tutorial Classes) ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இவ் அமர்வில் மாணவர்களின் பாடவியடங்கள்சார் பிரச்சினைகளுக்கு தேவையான தீர்வும் அறிவுறுத்தல்களும் வழங்கப்படும்.

இவ்வகுப்புக்கள் நடைபெறும் தினங்கள், இடம் என்பவற்றை வகுப்புக்கான போதனாசிரியர் மாணவர்களுடன் கலந்தாலோசித்துத் தீர்மானிப்பார். போதனாசிரியர் எதிர்பார்க்கும் முன்னாயத்தங்களுடன் இவ்வகுப்புக்களுக்குச் சமூகமளித்துக் கூடிய பயனைப் பெற்றுக்கொள்வது மாணவர்களின் பொறுப்பாகும்.

### 3.5 கட்புல, செவிப்புல சாதனங்கள்

மேற்குறிப்பிட்ட முறைகளுக்கு மேலதிகமாக விசேட கல்வித் துறையில் பல கட்புல செவிப்புல சாதனங்கள் உள்ளன. மொடியூலில் உள்ள பிரச்சினைகளை விளங்கிக்கொள்வதற்கு இக்கற்றல் சாதனங்கள் உதவும். திறந்த பல்கலைக்கழக நூல் நிலையத்திலுள்ள கட்புல, செவிப்புல வள நிலையத்திலும் நாட்பாடசாலைகள் நடைபெறும். பிரதேச/கற்கை நிலையங்களில் குழுக்களாக அல்லது தனித்தனியாக மாணவர்கள் இவற்றைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். அதேபோல் நாட்பாடசாலைகளில் வசதிகளைப் பொறுத்து சாதனங்கள் காண்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 4.0 மதிப்பீடு

### 4.1 மதிப்பீடு பின்வரும் மூன்று பிரதான பகுதிகளைக் கொண்டிருக்கும், அவ்வனைத்துப் பகுதிகளும் கட்டாயமானதாகும்.

a) ஒப்படைகள் மற்றும் செயற்பாட்டு அடிப்படையிலான ஒப்படைகள் மூலம் நடாத்தப்படும் தொடர் மதிப்பீடுகள்.

b) கல்வி ஆண்டின் இறுதியில் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சை.

c) கற்பித்தல் செயன்முறையின் மதிப்பீடு.

## 4.2 ஒப்படைகள் மூலம் நடாத்தப்படும் தொடர்

அட்டவணை இல. 01 இனைப் பார்க்க.

**அனைத்து ஒப்படைகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்**

## 4.3 இறுதிப் புள்ளிகளைத் தீர்மானித்தல்

* ஒப்படைப்புள்ளி (X), எழுத்துப் பரீட்சைப் புள்ளி (Y) இன் அடிப்படையில் இறுதிப்புள்ளி (Z) தீர்மானிக்கப்படும் முறை பின்வரும் சமன் பாட்டினால் காட்டப்படுகின்றது.

$$Z = X \times 40\% + Y \times 60\%$$

பாடநெறி ஒன்றினது பரீட்சைப் பெறுபேற்றைத் தீர்மானிக்கும் போது ஒப்படைகளில் மாணவர்பெற்ற புள்ளிகளின் சராசரிகளின் 40 அல்லது அதற்கு உயர்வாக இருத்தல் வேண்டும். இப்புள்ளிகள் இறுதிப் பரீட்சைப் பெறுயேற்றில் செல்வாக்குச் செலுத்தும்.

**புதிய சமன்பாடு:**

**if $X \geq 40$ and $Y \geq 40$ then $Z = (0.4 \times X) + (0.6 \times Y)$**

**if $X \geq 40$ and $Y < 40$ then $Z = Y$**

| பாடநெறி | பாடம் | சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஒப்படைகளின் எண்ணிக்கை | பெறவேண்டிய பெறுபேறுகள் |
|---|---|---|---|
| SNP8530 | விசேட தேவைகள்சார் உளவியல் | 3 | |
| SNP8531 | விசேட தேவைகள்சார் கல்வியின் அடிப்படைகள் | 3 | கணிப்பிடப்படும் ஒப்படைகளின் மூலம் பெறப்படும் புள்ளிகளில் 40% இறுதிப் பெறுபேற்றுடன் சேர்த்துக் கொள்ளப்படும். |
| SNP8532 | விசேட தேவைகள்சார் கல்வித் தொழினுட்பம் | 3 | |
| SNP8333 | விசேட தேவைகள்சார் கல்வியில் அளவீடும் மதிப்பீடும் | 2 | |
| SNP8334 | விசேட நிலைமைகள் மற்றும் கற்றல் தேவைக்கான அறிமுகம் | 1 செயற்திட்டம் | |
| SNP8335 | விசேட தேவைகள்சார் கல்வியில் சமூகமயமாக்கல் அடிப்படைகள் | 2 | |
| SNP8336 | கல்வியில் அறியப்படும் செல்நெறி | 2 | |
| SNP8237 | புனர்நிர்மாணமும் சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வும் | 2 | |
| SNP8338 | கல்வி வழிகாட்டலும் ஆலோசனை கூறலும் | 2 | |
| SNE8839 | கற்பித்தற் பயிற்சி | 10 கிழமைகளுக்கு எழுந்தமானமாக 5 பாடங்கள் மேற்பார்வை செய்யப்படும் கட்டம் 2 இல் இரண்டு பாடங்கள் மதிப்பிடப்படும் | |

**அட்டவணை - I ஒவ்வொரு பாடநெறிக்கும் சமர்ப்பிக்க வேண்டிய ஒப்படைகளின் எண்ணிக்கை**

- ஒப்படைகள் சமர்ப்பித்தலுக்கான இறுதித் திகதிகள் நாட்பாடசாலைகளுக்கான நேர அட்டவணையுடன் தரப்பட்டுள்ளது அவை பாடநெறியின் போது வழங்கப்படும். நீங்கள் பதிவு செய்துள்ள பிராந்திய/கற்கை நிலையத்தில் மாத்திரம் பூரணப்படுத்தப்பட்ட ஒப்படைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். உங்களுக்குரிய பிராந்திய/கற்கை நிலையம் உங்கள் மாணவர் பதிவுப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கொழும்பு மத்திய நிலையத்தில் ஒப்படைகள் சமர்ப்பிக்கப்படுவது கல்விப்பீடக் கட்டிடத்தில் அதற்கென உள்ள அலுவலகத்தில் ஆகும் என்பதைக் கவனத்திற்கொள்க.

- இறுதித் திகதிக்குப் பின்னர் ஒப்படைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

- ஒப்படைகளைச் சமர்ப்பிக்கும் போது ஒவ்வொரு ஒப்படைக்கும் முன்பக்கத்தில் அதற்குரிய மடிப்புறையும் [FOLDER] சேர்க்கப்பட வேண்டும். (ஆரம்ப நிகழ்வின்போது உங்களுக்கு வழங்கப்படும் மடிப்புறையை பெற்றுக்கொள்ள மறக்கவேண்டாம்)

- புள்ளியிடப்பட்ட ஒப்படைகளை மீளக் கையளிப்பதற்கு விசேட தேவைகள்சார் கல்வித் துறையினர் நடவடிக்கை எடுப்பார்.

- ஒப்படைகள் கிடைக்கப் பெறாவிட்டால் அல்லது ஒப்படைகள் பற்றி ஏதும் பிரச்சினைகள் இருந்தால், நாவலவில் உள்ள கல்விப் பீடத்தின் விசேட தேவைகள் சார் கல்வித்துறையினருடன் தொடர்பு கொண்டு, காலதாமதமின்றித் தீர்த்துக்கொள்வது மாணவர் பொறுப்பாகும்.

- **ஒப்படைக்கான புள்ளிகள் தொடர் மதிப்பீட்டுப் பகுதிக்கு உடன் அனுப்பப்படுகிறது,** உங்கள் ஒப்படைகள் பற்றிய உங்கள் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- உங்கள் ஒப்படையின் முன்பக்கத்தில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

  1. பெயர்:...........................................................
  2. பதிவிலக்கம்:................................................ (எல்லாப்பக்கத்திலும் பதிவிலக்கத்தைக் குறிக்கவும்)
  3. மத்திய/கற்கை நிலையம்:....................................................
  4. முகவரி:.........................................................
  5. பாடநெறி குறியீட்டு இலக்கம் ஒப்படை இல. (உதாரணம்: SNE8530 ஒப்படை இல. 02)

- ஒப்படைகள் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
- பரீட்சகர் குறிப்புக்களை எழுதுவதற்கு ஏதுவாக, தாளின் இடது பக்கத்தில் 4 செ.மீ அகலத்தில் நிரல் ஒன்றை வெற்றிடமாகவிடவும்.
- ஓர் ஒப்படைக்குரிய எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளும் ஒன்றாகவே எழுதி ஒப்படைக்க வேண்டும். அவற்றைப் பல்வேறு தொகுதிகளாகப் பிரித்து விடை எழுதுவதைத் தவிர்த்துக் கொள்ளவும்.
- ஒப்படைகளுடன் சேர்த்து வேறு கடிதங்கள் இணைத்து அனுப்பக்கூடாது.

<u>**முக்கியம்**</u>

**ஒப்படைகளைக் குறித்துரைக்கப்பட்ட தினத்துக்கு முன்னர் பூரணப்படுத்த உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி ஒப்படை வேலைகள் பூரணப்படுத்த வேண்டும். ஒப்படை தொடர்பான விபரங்கள் பதிவுத்தினத்தன்று வழங்கப்படும்.**

- ஒப்படைக்கான தரங்கள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

| புள்ளிகள் | தரம் |
|---|---|
| 85 - 100 | A+ |
| 70 – 84 | A |
| 65 – 69 | A- |
| 60 – 64 | B+ |
| 55 – 59 | B |
| 50 – 54 | B- |
| 45 – 49 | C+ |
| **40 – 44** | **C** |
| 35 – 39 | C- |
| 30 – 34 | D+ |
| 20 – 29 | D |
| 00 – 19 | E |

- ஒப்படைகள் என்பது மதிப்பீட்டுச் செயன் முறையில் முக்கியமான பகுதியாகும். ஆதலால் அது மாணவனின் சுயவாக்கமாக இருத்தல் வேண்டும். ஒப்படைகள் தயாரிக்கும் போது அல்லது சமர்ப்பிக்கும்போது யாதாயினும் நேர்மையீனங்கள் அவர்களின்பால் கண்டு பிடிக்கப்படின் மாணவர்களுக்கு “E” தரம் (சித்தியின்மை) வழங்கப்படும்.

## 4.5 எழுத்துப்பரீட்சை

4.5.1 இறுதி எழுத்துப் பரீட்சை பின்வருமாறு அமையும்.

இறுதி எழுத்துப் பரீட்சை

(SNP8530, SNP8531, SNP8532, SNP8333, SNP8334, SNP8335, SNP8336, SNP8237, SNP8338)

இப்பரீட்சைகள் கல்வி ஆண்டின் இறுதியில் நடைபெறும்

**‘எக்காரணம் கொண்டும் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் விடைத்தாள்கள் மீள் பரிசீலனை செய்யப்படமாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்’**

**4.5.2. இறுதிப் பரீட்சைக்கான வருவழி முறைமூலமான விண்ணப்பப்படிவங்களை 26.04.2020 இருந்து 24.05.2020 வரையான காலப்பகுதியில் சமர்ப்பிக்க முடியும்.**

## 4.6 கற்பித்தல் செயன்முறை SNP8839

இது இரண்டு கட்டங்களில் நடைபெறும்.

### i. கட்டம் - I

மாணவர் தாம் கற்பிக்கும் பாடசாலையிலேயே இச்செயன்முறைக் கற்பித்தலை செய்வர்.

### ii. கட்டம் - II

பல்கலைக்கழக விரிவுரையாளரால் மேற்பார்வையும், மதிப்பீடும் விசேட பாடசாலை அல்லது விசேட அலகு அல்லது உள்ளடங்கல் சூழ்நிலை ஒன்று பல்கலைக்கழகத்தால் தெரிவு செய்யப்பட்டு அங்கு நடாத்தப்படும்.

.

### 4.6.1 கால எல்லை

#### a) கட்டம் - I (தொடர்கணிப்பீடுகள்)

I. மாணவர் கற்பிக்கும் பாடசாலையில் 8 வாரங்கள் (வாரத்திற்க்கு 9-12 பாடவேளைகள் கற்பித்தல் பயிற்சிக்கென நியமித்த முதன்மை ஆசிரியரால் மேற்பார்வை செய்யப்படும். ஐந்து பாடங்கள் மதிப்பிடப்படும்.

II. இரண்டு கிழமைகள் கற்பித்தல் பயிற்சி நடைபெறும் விசேட தேவையுள்ள பிள்ளைகள் இருக்கும் பாடசாலையில் அல்லது உள்ளடங்கல் சூழ்நிலையில் இதே முதன்மை ஆசிரியரால் மதிப்பிடப்படும். தங்கள் சொந்தப் பாடசாலையில் கட்டம் ஒன்றினைப் பூர்த்திசெய்வர்.

**ஆசிரியர் அல்லாதோர்**

**பாடசாலை ஒன்றில் கற்பித்தலில் ஈடுபடாத ஆசிரிய மாணவர்கள் தமது முதலாம் கட்டக் கற்பித்தல் பயிற்சிக்காக பாடசாலையைத் தாமே ஒழுங்கு செய்து கொள்ள வேண்டும்**. இது தொடர்பாக பல்கலைக்கழகம் எதுவித பொறுப்பும் ஏற்காது.

பல்கலைக் கழகம், தொழினுட்பக் கல்லூரி, ஆசிரியர் கல்லூரிகள் போன்ற நிறுவனங்களில் செயன்முறைக் கற்பித்தலுக்கு வசதிகள் செய்துகொள்ள முடியாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

### கட்டம் - ii இறுதிப்பரீட்சை

இறுதிப்பரீட்சை திறந்த பல்கலைக் கழகத்தால் குறிப்பிடப்படும் ஒரு பாடசாலையில் 2 பாட வேளைகள் கற்பிக்க வேண்டும்.

கற்பித்தற் பயிற்சியின் இறுதிப் புள்ளி மேற்கூறிய இரண்டு கட்டங்களிலும் பெறும் புள்ளிகளில் தங்கியுள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

ஒவ்வொரு கட்டத்திற்குமெனக் குறிப்பிடப்பட்ட கால எல்லையினுள் கற்பித்தற் பயிற்சி பூரணப்படுத்தப்படல் வேண்டும். இக்கால எல்லைக்குப் புறம்பாகக் கற்பித்தற் பயிற்சியைப் பூரணப் படுத்த மாணவர் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

கற்பித்தற் பயிற்சிக் கட்டம்-I இனைத் திருப்திகரமாகப் பூரணப் படுத்தியவர்கள் மட்டுமே கட்டம்-II இற்கு அனுமதிக்கப்படுவர் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

### 4.6.2 கற்பித்தற் பயிற்சியைப் பிற்போடல்

யாதாயினும் ஒரு காரணத்தினால் நீங்கள் இக்கல்வியாண்டில் கற்பித்தற் பயிற்சியை மேற்கொள்ள முடியாது என இருந்தால் கற்பித்தற் பயிற்சி பாடநெறிக்குப் பதிவு செய்வதைத் தவிர்த்துக்கொள்ளவும்.

நீங்கள் கற்பித்தற் பயிற்சிக்கு பதிவு செய்து யாதாயினும் ஒரு காரணத்தால் இக்கல்வியாண்டில் கற்பித்தற் பயிற்சியைப் பூரணப்படுத்தாவிடின் அடுத்துவரும் கல்வியாண்டில் அதற்கான மீள்பதிவு செய்து கற்பித்தற் பயிற்சியைப் பூரணப்படுத்த வேண்டியிருக்கும். அப்போது நீங்கள் கற்பித்தற் பயிற்சிக்காக மீளத் தோற்றும் மாணவராகவே கருதப்படுவீர்கள்.

**கற்பித்தற் பயிற்சிக்கு பதிவு செய்து ஒரு மாதத்தினுள் மீளப்பெறாவிட்டால் அக்கல்வியாண்டில் உங்கள் கற்பித்தல் பயிற்சிக்கு அடுத்த வரும் கல்வி ஆண்டில் (புதிய மாணவர் ஒருவர் போல்) மீள்பதிவு செய்தல் வேண்டும்.**

குறைந்தது 10 பாட வேளைகள் வீதம் வரக்கூடியவாறு ஒரு பாடத்தையோ தெரிவு செய்தல் வேண்டும் ஒரு பாடத்தை மாத்திரம் தெரிவு செய்தால் இரண்டு வகுப்புகளில் கற்பிக்கப்படல் வேண்டும். இரண்டு பாடத்தைத் தெரிவு செய்தால் ஒரே வகுப்பிற்கு கற்பிக்கலாம்.

### 4.6.3. விரிவான படிவங்கள்

**கற்பித்தற் பயிற்சிக்குப் பதிவு செய்யும் போது அது பற்றிய தகவல்படிவம் இரண்டு பிரதிகள் கையளிக்கப்பட வேண்டும்.**

கற்பித்தற் பயிற்சியின் ஒவ்வொரு கட்டத்தின் இறுதியிலும் அக்கட்டத்தினை நீங்கள் பூரணப்படுத்தியுள்ளதாக கடிதம் ஒன்றினை உங்களது கற்பித்தற் பயிற்சிக்குரிய மேற்பார்வையாளரிடம் அல்லது விரிவுரையாளரிடம் பெற்று வைத்துக்கொள்ளவும்.

கற்பித்தற் பயிற்சிக்குப் **பதிவு செய்யும் போது** அதுபற்றி மாணவர் பதிவுப் புத்தகத்தில் **SNE8839** என குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை உடன் பரிசீலிக்கவும்.

### 5.6.2 பாடங்களைத் தெரிவு செய்தல்

ஒரு வாரத்திற்கு சராசரியாக 10 பாட வேளைகள் வீதம் கற்பிக்கக்கூடியவாறு மாணவர் கற்பித்தலில் ஈடுபடவேண்டும்.

### 5.6.5 பாடக்குறிப்பும் நேர அட்டவணைகளும்

கற்பித்தற் பயிற்சிக்கென கற்பிக்கும் ஒவ்வொரு பாடவேளைக்கும் பத்து (10) பாடக்குறிப்பு (Notes of Lesson) வீதம் தொடர்ச்சியாக 10 கிழமைகளுக்கு எழுதப்படல் வேண்டும். கற்பித்தற் பயிற்சி ஆரம்பித்த வாரத்திலேயே உரிய பாடத்திட்டம் (Scheme)

தயாரிக்கப்பட்டுப் பூரணப் படுத்தப்படல் வேண்டும். பாடத்திட்டம், பாடக்குறிப்பு என்பன C.R புத்தகத்தில் எழுதுதல் நன்று. நீங்கள் C.R புத்தகத்தில் எழுதுவீர்களாயின் ஒரு பாடத்திற்கு ஒரு C.R புத்தகம் வீதம் பயன்படுத்த வேண்டும். C.R புத்தகத்தில் தாள்களை நீக்குதல் குற்றமாகும். தாள்கள் ஒவ்வொன்றும் எண்ணிடப்படல் வேண்டும்.

ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு புததகம் பயன் படுத்தல் வேண்டும். கற்பித்தற் பயிற்சி - முதலாவது கட்டம் நடை பெறவுள்ள காலவெல்லை, மேற்பார்வையாளரின் பெயர், முகவரி என்பன பின்னர் அறிவிக்கப்படும். அப்போது தாம் கற்பித்தற் பயிற்சிக்கெனக் கற்பிக்கும் வகுப்பு நேரசூசியின் பிரதி யொன்றைத் தாமதமின்றி மேற்பார்வையாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அதில் கற்பித்தற் பயிற்சிக்கெனத் தெரிவு செய்துள்ள பாடவேளைகள் தெளிவாகக் காட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

கற்பித்தற் பயிற்சிக் காலத்தில் மாணவர் விடுகை எடுப்பதைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். தவிர்க்க முடியாத காரணத்தால் அவ்வாறு செய்யின் மேற்பார்வையாளரின் கவனத்துக்கு உடன் கொண்டுவருவது மாணவரின் பொறுப்பாகும்.

### 4.6.6 மேற்பார்வை முறை

கட்டம் - **I** இற்குரிய காலத்தினுள் மேற்பார்வையாளர் குறைந்தது ஐந்து தடவை மதிப்பீடு செய்து புள்ளிகளை தங்கள் கல்வித் துறைக்கு அனுப்புவார்.

கற்பித்தற் பயிற்சி தொடங்கி நான்கு வார காலத்தினுள் ஒரு தடவையேனும் மேற் பார்வையாளர் வராவிட்டால், நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளருக்கு உடன் அறிவித்தல் வேண்டும்.

### 4.6.7 கற்பித்தற் பயிற்சி (SNE8839) இற்கான இறுதிப்புள்ளிகளைக் கணித்தல்

- முதன்மை ஆசிரியரால் வழங்கப்படும் கற்பித்தற் பயிற்சி கட்டம் ஒன்றில் ஐந்து பாடங்களின் சராசரியின் 40% இனையும்.
- கட்டம்-II இல் விரிவுரையாரால் வழங்கப்படும் புள்ளி (இரு பாடங்கள்) யின் 60% இனையும் கவனத்திற் கொண்டே தீர்மானிக்கப்படும்.

a **பாடசாலை ஒன்றில் கற்பித்தலில் ஈடுபடாத ஆசிரிய மாணவர்கள் தமது SNE8839 முதலாம் கட்டக் கற்பித்தல் பயிற்சிக்காக (அரச பாடசாலையை அல்லது அங்கீகரிக்கப்பட்ட) பாடசாலையை தாமே ஒழுங்கு செய்துகொள்ள வேண்டும்**. இது தொடர்பாக பல்கலைக்கழகம் எதுவித பொறுப்பும் ஏற்காது

b. கற்பித்தற் பயிற்சிக் காலத்தில் **SNE8839** விடுமுறையை (லீவு) அனுமதிக்கப்படுவதாக கடிதம் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

c. தேவையான ஆவணங்கள் தொடர்பான தகவல்கள் தெரிவுக்குப்பின் வழங்கப்படும்

## 5.0 பட்டம் வழங்கல்

பட்டம் வழங்கலைத் தீர்மானிப்பதில் கற்பித்தற் பயிற்சி இறுதிப்பரீட்சைகள் ஆகியன கருத்திற்கொள்ளப்படும். பட்டம் மூன்று மட்டங்களில் வழங்கப்படும் சாதாரண சித்தி, (Ordinary pass ) சிறப்புச்சித்தி (Merit pass) விசேட சித்தி (Distinction pass)

கற்பித்தற் பயிற்சிக்கு C சித்தி பெற்றால் முதலாவது தடவையில் சாதரண சித்தியை பெறமுடியும் சிறப்புச்சித்தி (Merit pass) அல்லது விசேட சித்தி (Distinction pass) PGDSNE நிகழ்ச்சித்திட்டத்தில் பெறவேண்டுமாயின் முதலாவது தடவையிலேயே கற்பித்தற் பயிற்சியில் ‘A’ அல்லது ‘B+’ சித்தியைப் பெறவேண்டும்

விசேட தேவைகள்சார் கல்வி பட்டமேல் டிப்ளோமா திறந்த பல்கலைக்கழக ஒழுங்கு விதிகளுக்கு அமைய வழங்கப்படும்.

## 6. கட்டணங்கள்

### மாணவர் பதிவுக் கட்டணமும் போதனைக் கட்டணமும்:

| | | |
|---|---|---|
| பதிவுக் கட்டணம் | ரூபா | 1,000.00 |
| வசதிக் கட்டணம் | ரூபா | 1,500.00 |
| நூல் நிலையக் கட்டணம் | ரூபா | 200.00 |
| போதனைக் கட்டணம் | ரூபா | 66,000.00 |
| பயிற்சி செயற்பாடுகளுக்காக | ரூபா | 5,000.00 |
| **பூரண கட்டணம்** | **ரூபா** | **- 73,700.00** |

மாணவர்களால் உரிய கொடுப்பனவுகள் இரண்டு தவணை முறைகளில் செலுத்தப்பட வேண்டும். பதிவு செய்யும் போது முழுக் கட்டணத்தின் 60% இனை செலுத்துவதுடன் மிகுதியாக உள்ள 40% ஐ நிகழ்ச்சித்திட்டத்தின் நடுப்பகுதியில் செலுத்துதல் வேண்டும். இறுதிப் பரீட்சையில் சித்தியடையத்தவறும் மாணவர்கள் மீண்டும் தம்மை குறிப்பிட்ட நெறிகளுக்காக மீள்-பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும். அப்பாட நெறிகளுக்கு ஏற்ப அவர்கள் கட்டணங்களும் செலுத்த வேண்டியிருக்கும்.

## 7. நிகழ்ச்சித் திட்டம்: விசேட தேவைகள்சார் கல்வித்துறை

| பிரச்சினைகள் | தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்: |
|---|---|
| ஒப்படைகள்<br>கற்பித்தற் பயிற்ச்சியும் ஒப்படைகளும் | Faculty of Education<br>The Open University of Sri Lanka,<br>Nawala, Nugegoda.<br>0112881051 |
| பதிவு செய்தல் | SAR/Students Affairs<br>The Open University of Sri Lanka,<br>Nawala, Nugegoda.<br>0112881205 |
| பரீட்சை<br>பரீட்சைப் பெறுபேறுகள்<br>பரீட்சை நிலைய மாற்றம்<br>பரீட்சைக்குத் தோற்றியதற்கான அத்தாட்சிப் பத்திரங்கள் | SAR/Examinations<br>The Open University of Sri Lanka,<br>Nawala, Nugegoda.<br>0112881350 |

நீங்கள் அனுப்பும் எல்லாக் கடிதங்களிலும், ஆவணங்களிலும் உங்களது நிகழ்ச்சித்திட்டம், வருடம், பதிவிலக்கம், பெயர் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "PGDSNE" எனக் குறிப்பிடல் வேண்டும்.

கல்வி செயற்பாடுகள் சம்பந்தமாக உங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்குக் கடிதம் மூலம் கல்வித் துறையுடன் தொடர்புகொண்டு அப்பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வது உசிதமானது ஆகும்.

நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர்களைச் சந்திக்கக் கல்விப் பகுதிக்கு வருவதாக இருந்தால் **திங்கட் கிழமைகளில் காலை 10.00 மணி தொடக்கம் மாலை 03.00 மணி வரை சந்திக்கலாம்.**

## 8.0 கற்கை நெறி/நிகழ்ச்சித்திட்டத் திட்டத்தினைப் பிற்போடல்

முழுக்கல்வி நிகழ்ச்சித்திட்டத்தினையும் பிற்போட அனுமதிவழங்கப்பட மாட்டாது.

கற்கைநெறிகளைப் பிற்போடுவதற்கு விரும்பும் விண்ணப்ப தாரிகள் திறமைமட்டம் ஒன்பதிற்கு குறையாத பாடநெறிகளுக்குப் பதிவு செய்தல் வேண்டும். நீங்கள் பதிவு செய்துள்ள கல்வி நிகழ்ச்சித்திட்டதிலுள்ள பாடநெறிகளை பிற்போடுவதற்கான கால எல்லை நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பித்ததிலிருந்து ஒன்றரை மாதங்களில் முடிவடையும் எக்காரணத்தினாலும் இத்தினம் நீடிக்கப்படமாட்டாது. எவ்வாறாயினும் தங்கள் பதிவை பாடநெறிகளுக்கான திறமை மட்டத்திற்கு வைத்திருத்தல் வேண்டும்

## 8.1 பதிவு செய்த நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து நீங்குதல்:

பதிவு செய்தபின் ஒரு மாதத்தினுள் 10% கழிவுத் தொகையுடன் நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து நீங்கிக்கொள்ள முடியும் எக்காரணத்தினாலும் இக்கால எல்லை நீடிக்கப்படமாட்டாது.

பல்கலைக்கழகம் தெரிவிக்கும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் மாணவர்கள் பதிவு செய்தல்/மீள்பதிவு செய்தல் இயலாது.

## 9.0 நிகழ்ச்சித்திட்ட ஆரம்பம்

இந்நிகழ்ச்சித்திட்டம் **சித்திரை** மாதம் **2019** ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 10.0 விண்ணப்பப்படிவம்

முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவத்தின் பிரதி ஒன்றினை மாணவர்கள் மேலதிக தேவைக்காக வைத்திருக்க வேண்டும்.

## 11.0 My OUSL

இப்பொழுது நீங்கள் திறந்த பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்கென உள்ள MYOUSL வசதிகளை பின்வரும் URL முகவரியை பயன்படுத்தி நுழையமுடியும். http://myousl.ou.ac.lk/ அதேபோல் இணையத் தளம் http://myousl.ou.ac.lk/ என்ற திறந்த பல்கலைக் கழகத்தின் இணையத்தளத்தின் மூலமும் அதில் நுழையமுடியும். உங்கள் மாணவர் பதிவுப் புத்தகத்தில் தனிப்பட்ட தகவல் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளவாறு.

**User Name : (Student ID)**

**Password (தேசிய அடையாள அட்டை இலக்கம்)**

கடைசியிலுள்ள எழுத்துக்களுடன் முதல் நுழைவின்போது உங்களது தகவல்களை பாதுகாப்பதற்காக passwordஐ மாற்றிக் கொள்வதற்கு மறந்துவிடாதீர்கள்.

## 12.0 விண்ணப்பித்தலும் பதிவு செய்தலும்:

விண்ணப்பதாரிகள் கல்விப் பீடத்தினால் வழங்கப்படும் பட்டப் படிப்புக்களுக்காக திகழ்நிலை (Online) விண்ணப்பட் படிவங்களைப் பூர்த்தி செய்து விண்ணப்பிக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள். இணைப்பு-1 இல் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக வருவழி விண்ணப்பங்களை நிரப்ப முடியும்.

### 12.1 பதிவு செய்தல் நடைமுறை:

பதிவு செய்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவருக்கும் அறிவிக்கப்படும். அவர்களுக்கான பதிவு குறித்த ஒரு தினத்தில் இடம்பெறும் பொழுதில் அவர்கள் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். பதிவு செய்யும் அமர்வானது கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி, கற்றன், அப்பாரை ஆகிய பிராந்திய/கற்கை நிலையங்களில் மாத்திரம் நடைபெறும்.

### 12.2 பதிவு செய்தலுக்குத் தேவையான ஆவணங்கள்:

நீங்கள் பதிவு செய்வதற்காக

வருகைதரும்போது கட்டாயமாகக் கொண்டு வரவேண்டிய ஆவணங்கள்:

1. தேசிய அடையாள அட்டையும் அதன் பிரதியும்
2. பிறப்புச் சான்றிதழும் அதன் பிரதியும்
3. மூன்று புகைப்படங்கள் (passport size photographs; 35mm x 45mm)
4. கலைமாணிப் பட்டச் சான்றிதழ்
5. நியமனக்க கடிதம்
   **(அனைத்து ஆவணங்களிலும் மூல அவணத்துடன் ஒரு பிரதியையும் சமர்ப்பிக்க வேண்டும்)**
6. பணம் செலுத்தப்பட்டதை உறுதிப்படுத்தும் பல்கலைக் கழகத்துக்கான பிரதி.
7. உங்களது தொழில் தருணரிடமிருந்து 10 வாரகால கற்பித்தல் பயிற்சி நிலை – 1 இற்கு விடுவிப்பதற்கான அனுமதிக் கடிதம் ஒன்றினைக் கொண்டுவருதல் வேண்டும்.
8. உறுதியுரைப் படிவம்

## 13.0 முக்கியமான திகதிகள்

| | |
|---|---|
| **புதிய மாணவர்கள் பதிவு செய்யும் தேதி** | **21.03.2019** |
| **பின் பதிவுத் தேதி** | **25.03.2019** |
| **கல்விசார் செயற்பாடுகளின் ஆரம்பம்** | **26.04.2019** |
| **கல்விச் செயற்பாட்டுக்கான காலம்** | **26.04.2019 – 26.04.2020** |

## 13.1 முக்கிய நிகழ்வுகளுக்கான விளக்கங்கள்:

**பதிவு செய்தல்:** இலங்கைத் திறந்தபல்கலைக் கழகத்தின் விசேட தேவைகள்சார் பட்டப்பின் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தில் இணையும் ஒரு மாணவன் தேவையான நுளைவுத் தகைமைகளைக் கொண்டிருப்பதுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் பாடங்களின் திறமை மட்டங்களில் மொத்தத் திறமைமட்டம் குறைந்தது ஒன்பதைக் (9) கொண்ட பாடங்களையாவது முதலாம் கல்வியாண்டில் தொடர்வதற்குப் பதிவு செய்தல் வேண்டும். இந்நிகழ்வினையே நிகழ்ச்சித்திட்டத்தில் பதிவு செய்தல் எனப்படுகின்றது.

**சேர்த்தலும் - விலக்குதலும் (Add-Drop)** ஒரு மாணவன் தனது நிகழ்ச்சித்திட்டத்திற்கென வழங்கப்பட்ட பாடநூல்கள், நேரசூசி, ஒப்படைகள், செயற்பாடுகள் போன்றனவற்றை பரிசீலித்ததன் பின்னர் எவ்வித தண்டப்பணமுமின்றி தனது பாடத் தெரிவுகளில் மாற்றங்களைச் செய்வதற்கென **அனுமதிக்கப்படும் காலம் சேர்த்தலும் - விலக்குதலும் எனப்படும்.**

**விலக்குதல் (Drop) :** சேர்த்தல் - விலக்குதல் காலப்பகுதியின் இறுதித் தினத்திலிருந்து மேலும் ஒருமாத காலப்பகுதியில் மாணவர்கள் தங்களால் தொடரமுடியாது எனவெண்ணும் பாடங்களை பாடத்தொகுதியில் இருந்து விலக்குவற்கான

காலப்பகுதி. இதன்போது நிகழ்ச்சித்திட்டத்தின் முதற்கட்டப் பணம் திருப்பிச் செலுத்தப்படமாட்டாது.

**பின் பதிவு:** சாதாரண பதிவுக்கான காலப்பகுதியில் ஏதோ ஒரு காரணத்தினால் தங்களின் பதிவை நிறைவுசெய்ய முடியாத மாணவர்களுக்கென விசேடமாக வழங்கப்படுத் காலம்.

## 14.0 நிகழ்ச்சித்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட ஆசிரியர்குழு

கீழே தரப்பட்டுள்ள ஆசிரியர் குழு பற்றிய விபரங்கள், தமது பிரச்சினைகள் தொடர்பாக எவரிடம் கலந்துரையாட வேண்டும் என்பதை இனங்காண மாணவர்களுக்கு உதவியாக இருக்கும்.

| | |
|---|---|
| Dean/ Education | Prof. S.K.Karunanayake |
| Head/ Special Needs Education | Dr. K.A.C.Alwis |
| Programme Co ordinator (Sinhala/Tamil/English) | Mr.K.Ketheeswaran |
| Academic Staff | Ms. K.A.C. Alwis<br>Ms. BG.H. Anuruddhika<br>Mr. K. Ketheeswaran<br>Ms. K.A.S.S.Kuruppu |
| Overall Co-ordinators of Teaching Practice | Mr. K. Ketheeswaran<br>Ms. K.A.C. Alwis |
| | |
| **Course Co ordination** | **Internal** |
| Psychology for Special Needs Education | Course Team Leader<br>Ms. B.G.H. Anuruddhika |
| Philosophical Foundation of Special Needs Education | Course Tean Leader<br>Ms. B.G.H. Anuruddhika |

| | |
|---|---|
| Educational Technology for Special Needs Education | Course Team Leader<br>Ms. K.A.C. Alwis |
| Measurement & Evaluation in Sepcial Needs Education | Course Team Leader<br>Mr. M.N.C. Fernando |
| Introduction to Exceptionalities and Learning Needs | Course Team Leader<br>Ms. K.A.C. Alwis |
| Sociological Foundation of Special Needs Education | Course Tean Leader<br>Ms. B.G.H. Anuruddhika |
| Emerging Trends in Education | Course Tean Leader<br>Ms.K.A.C.Alwis |
| Rehabilitation and Community Based Rehabilitation | Course Tean Leader<br>Ms. K.A.C. Alwis<br>Ms. B.G.H. Anuruddhika |
| Educational Guidance and Counselling | Course Team Leader<br>Ms. B.G.H. Anuruddhika |
| Teaching practice | Course Team Leader<br>Ms. K.A.C. Alwis |
| Assignments | Course Team Leader<br>Ms. B.G.H. Anuruddhika<br>Mr. T.D.T.L. Dhanapala<br>Ms. K.A.C. Alwis |

## 15.0 முகவரி மாற்றம்

கற்பித்தற் பயிற்சியை மேற்கொள்ளும் காலத்தில் உங்களது பாடசாலை அல்லது கடமை முகவரிகளில் மாற்றம் ஏற்பட்டால் அதுபற்றி விசேட கல்வித் துறைக்குத் தாமதியாது அறிவித்தல் வேண்டும்.

i) உங்களது தனிப்பட்ட முகவரியில் மாற்றம் செய்ய வேண்டுமெனில் திறந்த பல்கலைக்கழக மாணவர் விவகாரப் பகுதியுடன் குறிப்பிட்ட கிராம சேவகரிடம் பெற்ற கடிதத்தையும் கொண்டு தொடர்பு கொள்ளவும்.

ii) அலுவலக முகவரியில் மாற்றம் ஏற்படின் அதிபரூடாக அல்லது நிறுவனத் தலைவர் ஊடாக கடிதம் மூலம் அறிவிக்கவும்.

இக்கைந்நூலில் தரப்பட்ட அறிவுறுத்தல் களையும் ஆலோசனைகளையும் தெளிவாக வாசித்து விளங்கி அவற்றிற்கமைய உங்களிடம் எதிர்பார்க்கப்படும் பணிகளை நிறைவு செய்து இந்நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ய வேண்டுமென வாழ்த்துகிறோம்.

## இணைப்பு – I

### நிகழ்நிலை (Online) முறைமூல விண்ணப்பப் படிவத்திற்கான அறிவுறுத்தல்கள்

கல்வி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் நிகழ்நிலை (Online) முறையின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது. முதலாவதாக நீங்கள் நிகழ்நிலை முறையில் உள்நுழை கணக்கு (Online login account) ஒன்றினை உருவாக்க வேண்டும். அதன் பின்பே உங்களது நிகழ்நிலை (Online) முறையிலான விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க முடியும்.

1. இணையதளத்தில் www.ou.ac.lk என (Type) செய்க,
2. பின்னர் இலங்கை திறந்த பல்கலைக்கழக இணையதளப் பக்கத்திலுள்ள விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக 'online Application' என்பதன் மேல் அழுத்துங்கள் (Click).
3. ஒரு புதிய கணக்கை திறப்பதனூடாக ஒரு முறை பதிவு செய்யுங்கள் இதனடிப்படையில் செயற் படுவதற்காக **'புதிய கணக்கு உருவாக்கம்'** (Create a new account) என்ற இடத்தில் அழுத்துவதன் (click) மூலம் மேலதிக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட பக்கத்தைப் பார்வையிடலாம்.

**குறிப்பு:-** நீங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் என்பன உள்ளடங்கலாக ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்துத் தகவல்களையும் வழங்குதல் வேண்டும். பதிவு செய்யப்படும் தொலைபேசி இலக்கமும் மின்னஞ்சல் முகவரியும் உங்களுடையது அல்லது உங்களின் குடும்ப அங்கத்தவர்கள் அல்லது நண்பர்களுடையதாக

இருத்தல் வேண்டும். பல்கலைக்கழகம் உங்களது விண்ணப்பப்படிவம் பெற்றுக் கொள்ளப்பட்டது என்பதைத் தெரியப்படுத்துவதற்கு தேவையேற்படும் போது மேலதிக தகவல்களை உங்களுக்கு வழங்க அவற்றினூடாக உங்கனைத் தொடர்புகொள்ளப் பயன்படுத்தலாம்.

1. உங்களுக்கான விண்ணப்பப்படிவத்திற்கான கணக்குத் திறக்கப்பட்டிருந்தால் நீங்கள் ஒரு தடைவை விண்ணப்பப்படிவத்தை நிரப்பி வருவழி முறை வழியாகச் சமர்ப்பிக்க முடியும். இச்செயற்பாட்டிற்காக நீங்கள் செய்ய வேண்டியவை வருவழி முறை விண்ணப்பப்படிவம் (Online Application) என்ற பகுதிக்குச் சென்று உங்களது கணக்கிற்கான பெயரையும் (Usernane) இரகசியக் குறியீட்டையும் பயன்படுத்தி உங்களது விண்ணப்பப்படிவம் உள்ள பகுதிக்கச் சென்று விண்ணப்பப்படிவத்தின் அனைத்துப் பகுதிகளையும் நிரப்பிய பின்னர் அதனைச் சமர்ப்பிக்க முடியும்.

**குறிப்பு:-** கீழே கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றி கட்டணங்கள் செலுத்தும் முறை அறிந்து தொடர்ந்து செயற்படுத்துங்கள். விண்ணப்பப்படிவம் ரூபா 800/- ஆகும். இதற்கான கட்டணத்தை கடன் அட்டை அல்லது பற்று அட்டையைப் பயன்படுத்திச் செலுத்த முடியும். கடன் அட்டை அல்லது Ez-cash அல்லது பற்று அட்டையைப் பயன்படுத்தி கட்டணம் செலுத்தும் வசதிகள் இல்லாதவர்கள் திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய நிலையங்களில் நேரடியாகச் சென்று கட்டணத்தைச் செலுத்த முடியும்.

2. உங்களது விண்ணப்பப்படிவத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பின்னர் உங்களது தேர்வுப் பரீட்சைக்கான

அனுமதிப்பத்திரத்தை இணையத் தளத்திலிருந்து தரையிறக்கம் செய்து கொள்ளலாம். தரையிறக்கம் செய்து பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரத்தை அச்சிட்டுக் கொள்ளவது கட்டயமானதாகும். ஏனெனில் தேர்வுப் பரீட்சையில் உற்பிரவேசிக்கும் போது காண்பிக்க வேண்டும்.

நிகழ்நிலை (Online) முறையினுடாக விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிப்பதற்கு மேலதிக உதவிகள் தேவைப்படுவோர் பின்வரும் எந்தவொரு பிராந்திய அல்லது கற்கை நிலையங்களுக்கு அழைப்பினை மேற்கொள்ள முடியும். அழைப்பினை மேற்கொள்வோர் பின்வரும் தகவல்களுடன் அழைப்பினை மேற்கொள்ளவும். விண்ணப்பதாரியின் முழுப்பெயரும் முகவரியும், தேசிய அடையாள அட்டை இலக்கம், மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி இலக்கம், உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள், பிராந்திய மற்றும் கற்கை நிலையத்துடன் தொடர் இலக்கங்களைப் பயன்படுத்தி தொடர்பினை ஏற்படுத்தலாம்.

## Sample Online Application form



# Online Application

## Please fill the Application

**Personal Details**

| | |
|---|---|
| Title | Mr. |
| Initial | |
| LastName | |
| Name Denoted by Initials | |
| Address line 1 | |
| Address line 2 | |
| Address line 3 | |
| NIC/Passport No | |
| Date of Birth | |
| E mail | |
| Telephone -Mobile | |
| Telephone -Fixed | |
| Country | Sri Lanka |

**Programe Details**

| | |
|---|---|
| Programe | Please select |
| Prefferd Center | Please select |
| Programme Medium | Please select |
| Selection Test Medium | Please select |

Appl Now | Reset